**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | CC. No.57/2021 | அரசுத்தரப்பு சாட்சி P.W.12 |
| பெயர் | வள்ளியப்பன் | கிராமம் |
| தந்தை பெயர் | | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Thiru.P.Manikandanprabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 17.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது உத்தரகாண்ட் மாநிலத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 30.09.2020 அன்று புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது காலை 10.30 மணிக்கு புதுக்கோட்டை காவலர் செல்வி ரம்யா மூலம் வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின்படி புதுக்கோட்டை நகர காவல் நிலைய குற்ற எண். 1327/2021 இ.த.ச.பிரிவுகள் 304ஏ வழக்கில் இறந்துபோன 26 வயது மதிக்கத்தக்க விவேகானந்தன், த/பெ.ரவி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். பிரேதத்தில் முகத்தில் பிண விரைப்பு காணப்பட்டது. மூக்கில் இருந்து இரத்தம் வழிந்து காணப்பட்டது. முதல் காயம் உடம்பில் நெஞ்சு மற்றும் வயிற்றுப்பகுதியில் 32X20 செ.மீ அளவிலான பல்வேறு சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. அதற்கு கீழ் உள்ள கல்லீரல், சிறுநீரகம் மற்றும் எலும்புகள் உடைந்து காணப்பட்டன. வயிற்றுப்பகுதியில் 2 லிட்டர் அளவிற்கான இரத்தம்

உறைந்து காணப்பட்டது. வயிற்றுப்பகுதியில் கருப்பு நிறத்தில் வாகன டயர் மார்க் காணப்பட்டது. இரண்டாவது காயம் இடதுபுற தோள்பட்டையில் 3X2 செ.மீ அளவிலான சிவப்பு நிற சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 3. இடது புற இடுப்பு பகுதியில் 4X2 செ.மீ அளவிலான சிவப்பு நிற சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 4. வலது புற கால் பகுதியில் 6X3 செ.மீ அளவிலான சிவப்பு நிற சிராய்ப்பு காயமும், உட்புற காயங்களுடன் காணப்பட்டது. மேற்படி நபர் அதிகப்படியான இரத்தப்போக்கினாலும், அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் இறந்துள்ளதாக கருத்துக்கூறி உடற்கூராய்வு அறிக்கை வழங்கினேன். அந்த உடற்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.7. லாரி போன்ற கனரக வாகனம் ஒரு நபர் மீது ஏறி இறங்கினால் நான் சொன்ன மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை**